# மதுவரிக் கட்டளைச் சட்டம்

# மதுவரி அறிவித்தல் இல: 01/2018

## மதுவரி உரிமம் பெற்ற நிறுவனங்கள் திறக்கப்படும் நேரம்

காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டவாறு மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம்) 32 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர ஆகிய நான், இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு மதுவரி உரிமம் பெற்ற நிறுவனங்கள் திறக்கப்படுகின்ற, மூடப்படுகின்ற நேரம் 2018.01.11 ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில் பின்வரும் வரும் அட்டவணையிலுள்ளவாறு இவ்வறிவித்தல் மூலம் இத்தால் திருத்தியமைக்கப்படுகிறது.

1980 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆந் திகதிய, 88/7 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 675 இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

மங்கள சமரவீர
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 01,
2018. 01 மாதம் 09 ஆந் திகதி

**அட்டவணை**

| நிரல் I | | நிரல் II |
|---|---|---|
| உரிமத்தின் வகை | | திறக்கப்படும் நேரம் |
| 1. | வெளிநாட்டு மதுபான தவரணை | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 2. | கள்ளு தவரணை | மு.ப. 11.00 – பி.ப.09.00 |
| 3. | ஹோட்டல்களுக்கான உரிமம் (எப்.எல்./7) சுற்றுலா சபையின் அனுமதிபெறாதவை | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 4. | ஹோட்டல் மதுச்சாலைக்கான உரிமம் (எப்.எல்/8) சுற்றுலா சபையின் அனுமதிபெறாதவை | மு.ப. 11.00 – பி.ப.10.00 |

| | | |
|---|---|---|
| 5. | ஹோட்டல்களுக்கான உரிமம் (எப்.எல்./7) சுற்றுலா சபையின் அனுமதிபெற்றவை | மு.ப. 11.00 – நள்ளிரவு 12.00<br><br>(அவசியப்படின் அதிகாலை 02.00 மணி வரை நீடிப்பதற்காக மேலதிக உரிமங்களும் வழங்கப்படலாம்) |
| 6. | ஹோட்டல் மதுச்சாலைக்கான உரிமம் (எப்.எல்/8) சுற்றுலா சபையின் அனுமதிபெற்றவை | |
| 7. | சினிமா கொட்டகை களியாட்ட மதுபான சாலைகளுக்கான உரிமம் (எப்.எல்/9) | மு.ப. 11.00 – பி.ப.10.00<br>(காட்சி திரையிடப்படும் போது மாத்திரம்) |
| 8. | உணவுச்சாலைகளுக்கான உரிமம் (எப்.எல்/11) சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெறாதவை | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 9. | உணவுச்சாலைகளுக்கான உரிமம் (எப்.எல்/11) சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்றவை | மு.ப. 11.00 – பி.ப.11.00 |
| 10. | விற்பனை நிலையத்தில் பியர், ஏல், ஸ்டவுட், வைன் என்பனவற்றினை நுகர்வதற்கான உரிமம் (எப்.எல்/22ஆ) (சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெறாத நிலையங்களுக்காக) | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 11. | விற்பனை நிலையத்தில் பியர், ஏல், ஸ்டவுட், வைன் என்பனவற்றினை நுகர்வதற்கான உரிமம் (எப்.எல் /22ஆ) (சுற்றுலா சபையின் அங்கீகாரம் பெற்ற நிலையங்களுக்காக) | மு.ப. 11.00 – பி.ப.11.00 |
| 12. | வாடி வீட்டிற்கான உரிமம் (எப்.எல்/12) | மு.ப. 11.00 – பி.ப.11.00 |
| 13. | புகையிரத உணவுச்சாலைக்கான உரிமம் (எப். எல்/10) | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 14. | சமூக மற்றும் மீளாக்கல் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள, அங்கத்தவர்கள் மாத்திரமான கழகங்கள் (எப். எல்/13அ) | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 15. | தனியாருக்கு உரித்தான கழக உரிமம் (எப்.எல்.13) | மு.ப. 11.00 – பி.ப.10.00 |
| 16. | சில்லறை விற்பனைக்கான மதுபான உரிமம் (எப்.எல்/04, ஏப்ல் 04) | மு.ப. 08.00 – பி.ப.10.00 |
| 17. | பியர், ஏல், ஸ்டவுட், வைன் விற்பதற்கான சில்லறை உரிமம் (எப்.எல். 22அ) | மு.ப. 08.00 – பி.ப.10.00 |